செய்தி வெளியீடு: 13 நாள்:11.04.2020

பெரம்பலூர் மாவட்டம்

**வேலா கருணை இல்லத்தில் உள்ள மனநலம் குன்றியவர்களுக்கு உணவு பொருட்கள் அடங்கிய தொகுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

**அதன் விபரம் பின் வருமாறு:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். மக்களின் நடமாட்டத்தை குறைத்து, நோய் தொற்று பரவுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துவரும் அதே வேளையில், பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம், அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கவும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் தினக் கூலிகள், விவசாயக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், டாக்ஸி ஓட்டுநர்கள், கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், முதியோர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் அரசின் உதவியுடன் செயல்படும் கருணை இல்லங்களில் வசிப்போர் நலன் கருதி அவர்களுக்கு தடையின்றி உணவுகள் கிடைக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதனைத்தொடர்ந்து பெரம்பலூரில் உள்ள வேலா கருணை இல்லத்தில் வசிக்கும் 79 மனநலம் குன்றியோருக்கு ஆவின் தயாரிப்பு உணவுபொருட்கள் அடங்கிய தொகுப்பினை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.04.2020) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற எளிய நிகழ்ச்சி ஒன்றில் வேலா கருணை இல்ல நிர்வாகி திருமதி அனிதா அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திருமதி காமாட்சி, முடநீக்கு வல்லுநர் திரு.ஜெயராமன், திறன் உதவியாளர் திரு.செல்வகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**